# சூழ்நிலையியல்

## இரண்டாம் வகுப்பு

### இரண்டாம் பருவம்

# 1. ஊர்ச் சந்தை









சூர்யாவும், அப்பாவும்
காய்கறிகள், பழங்கள் வாங்க
சந்தைக்குச் சென்றனர்.






சூர்யா : அப்பா, சந்தையில் என்னென்ன பொருள்கள் கிடைக்கும் ?

அப்பா : நம் உணவுக்குத் தேவையான தானியங்கள், பருப்பு வகைகள், காய்கறிகள், பழங்கள் மற்றும் கீரைகள் கிடைக்கும்.



சூர்யா : அப்பா, மளிகைக் கடையில் சில பொருள்களை வாங்கினீர்கள். அவை என்னென்ன ?

அப்பா : அவை, நாம் தினமும் உண்ணும் உணவில் பயன்படுத்தும் தானியங்கள், பருப்பு வகைகள் ஆகும்.









சூர்யா : அப்பா, வேறு என்னென்ன பொருள்கள் வாங்கினீர்கள் ?

அப்பா : நாம் உணவில் சுவைக்காகவும், மணத்திற்காகவும் பயன்படுத்தும் மசாலாப் பொருள்கள், வாசனைப் பொருள்கள் வாங்கியுள்ளேன்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள வாசனைப் பொருள்களின் பெயர்களை எழுதுவோமா !













அப்பா : சூர்யா, பழக்கடையில் என்னென்ன பழங்கள் பார்த்தாய் ?

சூர்யா : ஆப்பிள், ஆரஞ்சு, திராட்சை, மாம்பழம், கொய்யா.




கீழே கொடுக்கப்பட்டுள்ள பழங்களின் பெயர்களை எழுதுவோமா !














சூர்யா : அப்பா, நான் பார்த்த காய்கறிகளின் பெயர்களைச் சொல்லவா ?

அப்பா : நன்று. சொல் பார்க்கலாம் !

சூர்யா : தக்காளி, கத்தரிக்காய், பாகற்காய், புடலங்காய்.



கீழே கொடுக்கப்பட்டுள்ள காய்கறிகளின் பெயர்களை எழுதுவோமா !













அப்பா : கீரைக்கடையில் என்னென்ன கீரை வகைகளைப் பார்த்தாய்?

சூர்யா : முருங்கைக்கீரை, முளைக்கீரை, அரைக்கீரை, மணித்தக்காளிக்கீரை, புதினா எனப் பலவகைக் கீரைகளைப் பார்த்தேன்.

## கீழே கொடுக்கப்பட்டுள்ள கீரைகளின் பெயர்களை எழுதுவோமா!










அப்போது, ஒரு ஐஸ் வண்டிக்காரர் இவர்களை நோக்கி வரவே, சூர்யாவிற்கு ஐஸ் சாப்பிட வேண்டும் என்ற ஆசை வந்தது.




சூர்யா : அப்பா, ஐஸ் வாங்கித் தாங்கப்பா.

அப்பா : நேற்றுதான் ஐஸ் சாப்பிட்டாய் . தினமும் ஐஸ் சாப்பிடக்கூடாது.

சூர்யா : ஐஸ் சாப்பிட்டா என்னப்பா ?


அப்பா : ஐஸ் சாப்பிடுவது பல்லுக்கும், உடல்நலத்திற்கும் நல்லதல்ல. வேண்டுமானால் பால் சாப்பிடலாம். வாங்கித்தரவா ?

சூர்யா : சரிங்கப்பா.

( இருவரும் பாலைப் பருகுகின்றனர் )

சூர்யா : பால்கோவா பாலிலிருந்துதான் தயார் செய்வார்களா அப்பா ?

அப்பா : ஆமாம் சூர்யா. பால்கோவா, பால்பேடா போன்ற இனிப்பு வகைகளைப் பாலிலிருந்துதான் தயார் செய்வார்கள்.



வேறு என்னென்ன பொருள்கள் பாலிலிருந்து நமக்குக் கிடைக்கின்றன ? என்று மற்றவர்களைக் கேட்டு எழுதுங்கள்.

சூர்யா : அப்பா, நாம் சாப்பிடுகின்ற உணவில் எதற்காக இவையெல்லாம் சேர்க்க வேண்டும் ?

அப்பா : நாம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு இந்த உணவுப் பொருள்கள் எல்லாம் உணவில் சேர்க்க வேண்டும். நாம் உண்ணும் உணவுப் பொருள்களில் சில சக்திக்கும், சில வளர்ச்சிக்கும், சில பாதுகாப்பிற்கும் உதவுகின்றன.

நாம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு, நம்முடைய உணவில் காய்கறிகள், பழங்கள், கீரைகள், தானியங்கள் மற்றும் பருப்பு வகைகளை அவசியம் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவை நமக்குச் சக்தியையும் பாதுகாப்பையும் தருகின்றன.

நீங்கள் விரும்பி உண்ணும் உணவு வகைகளை எழுதுங்கள் !

உங்கள் நண்பர்களும், குடும்பத்தில் உள்ளவர்களும் விரும்பி உண்ணும் உணவு வகைகளை எழுதுங்கள் !

● உணவுப் பொருள்களுக்கு ஏற்ற வண்ணம் தீட்டுவோமா!



## வகைப்படுத்துவோமா!



| தானியங்கள் | பருப்புகள் | காய்கறிகள் | கீரைகள் | பழங்கள் | இறைச்சி |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

கீழே கொடுக்கப்பட்டுள்ள பொருள்களிலிருந்து என்னென்ன உணவு தயாரிக்கலாம் ?

| | | | |
|---|---|---|---|
| அரிசி | | | |
| கோதுமை | | | |
| பால் | | | தயிர் |
| உளுந்து | வடை | | |
| துவரம் பருப்பு | | | |
| கடலைப் பருப்பு | | | அடை |

கீழே உள்ள கட்டங்களில், சில உணவுப் பொருள்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து பட்டியலிடுங்கள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பா | ரி | மு | ட் | டை | கு | இ |
| ல் | சா | த | க | கோ | து | மை |
| ட | மீ | வ | அ | ரி | சி | உ |
| க | ன் | ரி | க | ட | லை | றி |
| வா | ஆ | ப் | பி | ள் | கு | ப |
| கு | னி | யா | ல | வ | ள | லா |
| ம் | உ | ளு | ந் | து | மி | மா |

பருப்பு வகைகள் __________

பழ வகைகள் __________

வாசனைப் பொருள்கள் __________


இறைச்சிப் பொருள்கள் __________

ஊட்டச்சத்து

கிளியின் உருவப்படத்தை வரைந்து அதில் தானியங்களை ஒட்டி அழகுபடுத்துவோமா!

பெயர் : ______________ வகுப்பு : ____________

காய்கறிகள், பழங்கள், தானியங்கள் மற்றும் பல்வேறு வகையான உணவுப் பொருள்களின் படங்களை ஒட்டி படத்தொகுப்பு தயார் செய்வோமா !



**உங்களுக்குத் தெரியுமா ?**

சாக்லேட், ஐஸ்கிரீம், குளிர் பானங்கள் போன்றவற்றைச் சாப்பிடுவது உடலுக்கு நல்லதா ? கெட்டதா ? ஏன் ?



# 2. வேலை

படத்தில் ஒவ்வொருவரும் செய்கின்ற வேலைகளைப் பாருங்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள் ? என்று கூறுங்கள்.



ஒரு பொருளை நகர்த்த, அதனை இழுக்கவோ தள்ளவோ வேண்டும்.








இழுத்தல், தள்ளுதல் மூலமாக வேலைகள் செய்யப்படுகின்றன.




மக்கள் தேரினை
இழுப்பதால் தேர்
நகர்கிறது.

கயிறு இழுக்கும்
போட்டியில் இரு
அணியினரும்
கயிற்றைத் தம் பக்கம்
இழுக்கிறார்கள்.






குதிரை, வண்டியை
இழுப்பதால்
வண்டி முன்நோக்கிச்
செல்கிறது.



காய்கறி வண்டிக்காரர் வண்டியைத் தள்ளுவதால் வண்டி முன்நோக்கி நகர்கிறது.



மீனவர்கள் கட்டுமரத்தைத் தள்ளுவதால் கட்டுமரம் கடலில் செல்கிறது.



குழந்தை நடைவண்டியைத் தள்ளுவதால் வண்டி நகர்கிறது.



வண்டியை
இழுக்கும் போதும்
தள்ளும் போதும்
முன்னும் பின்னும்
நகர்கிறது.





ரம்பத்தை
இழுப்பதாலும்
தள்ளுவதாலும் மரம்
அறுபடுகிறது.



## படங்களைப் பாருங்கள்! என்ன செயல் நடைபெறுகிறது ?











இழுத்தல், தள்ளுதல் மூலமாக
வேலை செய்யப்படுகிறது.

படத்தில்


இழுத்தல் செயலுக்கு 1 எனவும்,

தள்ளுதல் செயலுக்கு 2 எனவும் எழுதி வகைப்படுத்துங்கள்.















இழு, தள்ளு– செயல்கள் மூலமாக என்ன வேலை நடைபெறுகிறது ? என்று கண்டு பிடியுங்கள்.

| இழு / தள்ளு செயல் | நடைபெறும் வேலை |
| --- | --- |
|  | பொருள்கள் அரைத்தல் |
|  | ______________ |
|  | ______________ |
|  | ______________ |
|  | ______________ |

**உங்களுக்குத் தெரியுமா ?**

நீங்கள் சுவரில் பந்தை எறியும்போது அது மீண்டும் அதே வேகத்தில் உங்கள் கைக்கு வருகிறதே ஏன் ?



# 3. சுத்தம்

உங்கள் சுற்றுப்புறத்தில் இது போன்ற காட்சிகளைப் பார்த்திருக்கிறீர்களா ?














- இது போன்ற செயல்கள் நடைபெறாவிட்டால் என்ன ஆகும் ?
- மேற்கண்ட செயல்கள் எந்தெந்த இடங்களில் நடைபெறுகின்றன ?

படத்தைப் பாருங்கள், தூய்மைச் செயல்கள் நடைபெறும் காட்சிகளை மட்டும் கண்டு பிடித்து வட்டமிடுங்கள்.



வட்டமிட்ட செயல்களை மட்டும் எடுத்து எழுதுவோமா!

கீழே கொடுக்கப்பட்டுள்ள செயல்களில் எது சரி? எது தவறு? என்பதைக் குறிப்போமா!









சூழ்நிலையியல்







- பொது இடங்களாகிய பேருந்து நிலையம், இரயில் நிலையம், பள்ளிக்கூடம், மருத்துவமனை, கடைவீதி போன்ற இடங்களைத் தூய்மையாக வைத்திருப்பது நமது கடமை.

- நாம் ஆரோக்கியமாக வாழ நமது சுற்றுப்புறம் தூய்மையாக இருத்தல் வேண்டும்.






பழமை இது.

புதுமை எது ?
என்பதை அம்புக் குறியிட்டுக் காட்டுங்களேன் !




















## கழிவறைப் பயன்பாடு



- காலை எழுந்தவுடன் கழிவறைக்குச் செல்வது நல்லபழக்கம்.
- திறந்தவெளிக் கழிவறையைப் பயன்படுத்தக் கூடாது. ஏனெனில், சுற்றுப்புறமும், நமது ஆரோக்கியமும் பாதிக்கப்படும்.
- கழிவறை சென்று வந்தபின் சோப்பினால் கைகளைக் கழுவ வேண்டும்.
- கழிவறையைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

உலகக் கழிவறை தினம் 2009 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 19 ஆம் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

## படத்தில் உள்ள பொருள்களின் பயன்பாடுகள் என்ன ?


















| | |
|---|---|
| குப்பைத் தொட்டி | குப்பைகளைச் சேகரித்தல் |
| வீடு துடைப்பான் | |
| சீப்பு | |
| துடைப்பம் | |
| சோப்பு | |
| தெரு பெருக்கும் துடைப்பம் | |
| பற்பசை | |

## கலந்துரையாடுவோமா!

ஒருவர் வீட்டைப் பெருக்கி சுத்தம் செய்யும்போது சேர்ந்த குப்பையில் வாழைப்பழத்தோல், ஆரஞ்சுபழத்தோல், காய்கறிக் கழிவுகள், பிளாஸ்டிக்பை, உடைந்த கண்ணாடி வளையல், காலியான பேனா மூடி போன்றவை இருந்தன. இவற்றில் வாழைப்பழத்தோல், ஆரஞ்சுபழத்தோல் மற்றும் காய்கறிக் கழிவுகள் ஒரு பெட்டியிலும் மற்றவைகளை வேறு ஒரு பெட்டியிலும் பிரித்துப் போட்டார். ஏன் ?




## படம் வரைவோமா ?

கீழ்வரும் வாக்கியங்களைப் படித்துச் சரி என்றால்  இப்படத்தையும், தவறு என்றால்  இப்படத்தையும் வரைவோம்!

- திறந்தவெளிக் கழிவறையைப் பயன்படுத்துதல் நல்லது.
- குளித்த பின் சாப்பிட வேண்டும்.
- சாப்பிட்ட பின் குளிக்க வேண்டும்.
- தூங்கும் முன் பல்துலக்க வேண்டும்.
- உணவு உண்பதற்கு முன் கைகளைக் கழுவுதல் அவசியமற்றது.

**தூய்மைச் செயல்களைக் கவனி. அவற்றை எண்களால் வரிசைப்படுத்துவோமா!**

 ______

 ______

 ______

 ______

 ______

 ______

 ______

 ______

 ______

 ______

**உங்களுக்குத் தெரியுமா ?**

சுற்றுப்புறத்தில் தேங்கி நிற்கும் கழிவுநீரில் உற்பத்தியாகும் கொசுக்கள் மூலமாக என்னென்ன நோய்கள் வரும் ?



# 4. பரிசல் பயணம்

இடம்:

அன்புள்ள ஜெனிபருக்கு,

நாள் :

நான் நலம். நீ நலமா ? உன் கடிதம் கிடைத்தது. நீ சுற்றுலாச் சென்று வந்த அனுபவத்தைப் பற்றி அறிந்தேன்.

நாங்களும் விடுமுறைக்கு எங்கள் கிராமத்திற்குச் சென்றிருந்தோம்.

அங்குக் கோவில் திருவிழா, எங்களது தோட்டம் செல்வது, ஆற்றில் பயணம் மற்றும் விளையாட்டு எனப் பொழுது கழிந்தது.

அதில் எனக்கு மிகவும் பிடித்தது பரிசல் பயணம்! நாங்கள் ஆற்றின் அக்கரையில் உள்ள கோவிலைப் பார்ப்பதற்குப் பரிசலுக்காகக் காத்திருந்தோம்.

அப்போது கரையோரத்தில் சிறுவர்கள் தூண்டில் போட்டு மீன் பிடிப்பதையும் ஆடு, மாடுகள் தண்ணீர் குடிப்பதையும் பார்த்தோம்.




பரிசல் வந்தது. நாங்கள் ஒவ்வொருவராக ஏறும்போது பரிசல் குலுங்கியது. எனக்குப் பயமாக இருந்தது. எல்லோரும் அமர்ந்த பிறகு பரிசல் குலுங்காமல் சென்றது.

பரிசலில் சென்று கொண்டிருக்கும் போது ...

- நீரில் துள்ளிக் குதித்து ஓடும் மீன்களையும்,
- வளைந்து, நெளிந்து செல்லும் தண்ணீர்ப் பாம்புகளையும்,
- செடி, கொடி, மரக்கட்டைகள் ஆற்றில் மிதந்து வருவதையும் பார்த்தோம்.



அப்போது பரிசல்காரர் திடீரென்று பரிசலை வேகமாக விலக்கினார். அங்கே நீர்ச்சுழல் இருந்தது.



சிறிது தூரம் சென்றோம். எதிரே ஒரு பரிசல் வந்தது. அதில் வந்தவர்கள் கவச உடை அணிந்திருந்தார்கள். படகைச் சுற்றி ரப்பர் குழாய் இருந்தது. அதைக் கண்டவுடன் ‘நாமும் பாதுகாப்பிற்கு இவற்றைக் கொண்டு வரவில்லையே’ என்று பயந்தோம்.



பின் பரிசல் மரப்பாலத்தின் கீழே சென்று கொண்டிருக்கும்போது, "டமால்" என்ற சத்தம் கேட்டது. தண்ணீர் சிதறி எங்கள் மேல் தெறித்தது.

திரும்பிப் பார்த்தபோது பாலத்தின் மேலிருந்து சிறுவர்கள் ஒவ்வொருவராக ஆற்றில் குதித்துக் கொண்டிருந்தனர். அப்போது எங்களுக்கும் குதிக்க வேண்டும் போல் இருந்தது.

கரை ஓரமாகச் செல்லும்போது, வளர்ந்திருந்த தென்னை மரத்திலிருந்து குலை குலையாய்த் தேங்காய் தொங்குவதும் அதன் ஓலைகள் நீரை உரசிக் கொண்டிருப்பதும் கரை ஓரப் பசுமையும் காண்பதற்கு மகிழ்ச்சியாக இருந்தது.





கரையை நெருங்கும்போது நீரில் நாய் வேகமாக நீந்தி வந்தது.



அதைப் பார்த்த நண்டு தன் வளையை நோக்கி வேகமாக ஓடியது.



தவளை கரையில் இருந்து ஆற்றில் தாவிக் குதித்தது.



மீனைக் கொத்திய கொக்குக் கூட்டம் வானில் பறந்தது. இவையாவும் கண்கொள்ளாக் காட்சிகளாக இருந்தன.

இந்தப் பரிசல் பயணம் எனக்கு ஆச்சரியத்தையும், மகிழ்ச்சியையும் கொடுத்தது. அடுத்த விடுமுறைக்கு நீயும் இங்கு வா! நாம் எல்லோரும் ஆற்றில் பயணிப்போம் !

பாசத்துடன்,
மாலினி.

## கவனத்தில் கொள்வோமா !

பரிசலில் பயணம் செய்யும் போது நிற்கக் கூடாது.






பரிசலில் குறிப்பிட்ட எண்ணிக்கையில்தான் பயணம் செய்ய வேண்டும்.


பரிசலில் பயணம் செய்யும்போது கட்டாயம் பாதுகாப்பு உடை அணிய வேண்டும்.





நீர்ச்சுழல் உள்ள இடங்களில் குளிக்கக் கூடாது.

புதைமணல் உள்ள இடங்களுக்கு அருகில் செல்லக்கூடாது.




நீர்ப்பகுதியில் பயணம் செய்யும் போது ஆபத்து ஏற்படுமாயின், அதிலிருந்து தப்பிக்க உதவும் பொருள்களை மட்டும் வட்டமிடுக.

தலைக்கவசம் மூங்கில் மரக்கட்டை

பாதுகாப்பு உடை இரப்பர் வளையம்

## பயணங்கள் பலவகைப்படும் :







மாட்டுவண்டிப் பயணம், பரிசல் பயணம்,
பேருந்து பயணம், இரயில் பயணம்,
கப்பல் பயணம், விமானப் பயணம் என
பயணங்கள் பல வகைப்படும்.
இதில்...



சாலையில் செல்லும் பயணம் ______________

நீரில் செல்லும் பயணம் ______________

ஆகாயத்தில் செல்லும் பயணம் ______________







### உங்களுக்குத் தெரியுமா ?

மலைப் பகுதிகளில் பயணம் செய்யும்போது
என்னென்ன காட்சிகளைப் பார்ப்பீர்கள் ?



‘என்னால் முடியும், நான் செய்தேன்’

('I can, I did')

மாணவர் கற்றல் செயல்பாடுகள் பதிவேடு

பாடம் :

| வ. எண் | நாள் | பாட எண் | பாடத்தலைப்பு | செயல்பாடுகள் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |